<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.</u>

<u>பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு, செப்டம்பர்/அக்டோபர் 2018</u>

<u>தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்</u>

<u>செய்திக்குறிப்பு</u>

செப்டம்பர்/அக்டோபர் 2018–ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தனித்தேர்வர்கள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) நேரில் சென்று விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தனித்தேர்வர்கள் தங்களது விண்ணப்பங்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்களுக்குச் சென்று (Government Examinations Service Centre) **<u>05.09.2018 (புதன்கிழமை) முதல் 10.09.2018 (திங்கட் கிழமை) மாலை 05.45 மணிக்குள் 09.09.2018 (ஞாயிற்றுக் கிழமை)</u>** தவிர்த்து விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**<u>விண்ணப்பிக்க தகுதியானவர்கள்:</u>**

**<u>ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள்</u>** **S வகையினர்**

- முந்தைய பருவங்களில் தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள் அவர்கள் தோல்வியுற்ற பாடங்களில் மட்டும் தற்போது தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.
- அறிவியல் பாடத்தை பொறுத்தவரை செய்முறைத் (Practical) / கருத்தியல் (Theory) என்ற இரு பகுதிகளில் எந்தப் பகுதியில் தோல்வியடைந்தாலும் தோல்வியுற்ற பகுதிக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**<u>(முதன்முறை பத்தாம் வகுப்பு தேர்வெழுதுபவர்கள் )</u>** **SP வகையினர்**

- இவ்வகைத் தேர்வர்கள் 01.09.2018 அன்று 14 $^{1/2}$ வயது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியப் பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள் தற்போதுள்ள சமச்சீர் கல்வித்திட்டத்தின் கீழ் மட்டுமே தேர்வுகள் நடத்தப்படுவதால் அறிவியல் செய்முறைப் பயிற்சிப் பெற்றவர்கள் மட்டுமே செய்முறைத் தேர்வு உட்பட அனைத்துப் பாடங்களிலும் மீளத் தேர்வெழுத விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர்.

- செப்டம்பர் 2018 தேர்வுக்கான அறிவிக்கை வெளியிடும் முன்பு வரை அறிவியல் செய்முறைப் பயிற்சி வகுப்பிற்கு 80 சதவீதம் வருகையுடன் பயிற்சி பெற்றவர்கள் பயிற்சி பெற்றதற்கான சான்றுடன் அனைத்துப் பாடங்களிலும் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.
- **கடந்த 08.06.2018 முதல் 30.06.2018 வரை அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்பிற்கு பெயர் பதிவு செய்துள்ள தேர்வர்கள் செப்டம்பர்/அக்டோபர் 2018 துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்க தகுதி இல்லை. இவர்கள் மார்ச் 2019 பொதுத் தேர்வெழுத தகுதி உடையவர் ஆவர்.**

**மிக முக்கியம்**

**மொழிப்பாடம் பகுதி – I ல் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்.**

பத்தாம் வகுப்பு தேர்வெழுதும் நேரடி தனித்தேர்வர்கள் (SP வகையினர்) மொழிப்பாடம் பகுதி – I ல் தமிழ் மொழியில் மட்டுமே தேர்வெழுதிட அனுமதிக்கப்படுவர்.

ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்றவர் (S வகையினர்) பகுதி – I ல் பிற மொழிப்பாடங்களில் (Other Language) தோல்வியுற்றிருப்பின், செப்டம்பர்/அக்டோபர் 2018 தேர்வில் அன்னார் தோல்வியுற்ற பிறமொழியில் தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

## விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்கள் (Government Examinations Service Centres):

ஆண் தனித்தேர்வர்களும், பெண் தனித்தேர்வர்களும் தங்களது விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்திட கல்வி மாவட்ட வாரியாக தனித்தனியே அரசுத் தேர்வு சேவை மையங்கள் (Government Examinations Service Centres) அமைக்கப்பட்டுள்ளது. தனித்தேர்வர்கள் இம்மையங்களுக்கு நேரில் சென்று தங்களது விண்ணப்பங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்களின் விவரங்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மை/ மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அலுவலர் அலுவலகங்களிலும் இவ்விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

## வெளி மாநில மற்றும் வெளிநாடு வாழ் தேர்வர்கள் விண்ணப்பிக்கும் முறை:

இவ்வலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வு சேவை மையங்களில் (Government Examinations Service Centres) நேரடியாக சென்று விண்ணப்பிக்க இயலாத வெளி மாநில மற்றும் வெளிநாடு வாழ் தனித்தேர்வர்கள், செப்டம்பர்/அக்டோபர் 2018 எஸ்.எஸ்.எல்.சி துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், இத்துறையின் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படத்துடன் தேர்வரின் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் ஒருவர் மூலம் சென்னை – 6 அரசுத் தேர்வுகள் இயக்கக இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களை மேற்குறிப்பிட்ட நாட்களுக்குள் நேரில் அணுகி விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

## வெளி மாநில/ வெளி நாட்டில் பயின்றவர்கள் விண்ணப்பிக்கும் முறை:

வெளி மாநிலம் மற்றும் வெளி நாட்டில் பயின்று தமிழ் நாட்டில் செப்டம்பர்/அக்டோபர் 2018 எஸ்.எஸ்.எல்.சி துணைத் தேர்வெழுத விரும்பும் தனித்தேர்வர்கள் இடப்பெயர்வு சான்றிதழ் (Migration Certificate) மற்றும் இணைச் சான்றிதழ் (Equivalent Certificate) பெற்று அவற்றை விண்ணப்பத்துடன் இணைத்து அரசுத் தேர்வு சேவை மையங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

## தேர்வுக் கட்டணம் : (கருத்தியல் தேர்வு – Theory Exams)

தேர்வுக் கட்டணம் ரூ.125/– உடன் கூடுதலாக ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– ஐ சேர்த்து மொத்தம் ரூ.175/– பணமாக அரசுத் தேர்வு சேவை மையத்தில் செலுத்துதல் வேண்டும்.

## தேர்வுக் கட்டண விலக்கு

**பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோருக்கு மேற்குறிப்பிட்ட தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

### மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள்:

தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம் போன்ற சலுகைகளை பெற விரும்பினால் உரிய மருத்துவச் சான்றிதழ்களை இணைத்து தனியே ஒரு சலுகை கோரும் கடிதத்தை தமது விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி மாற்று திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த விவரத்தினை www.dge.tn.gov.in இணையதளம் மூலம் விரிவாகத் தெரிந்துக் கொள்ளலாம்.

.4...

## தேர்வு மையம்

தனித்தேர்வர்கள் அவர்கள் விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வெழுதிட அனுமதிக்கப்படுவர்.

## விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம் மற்றும் தேர்வுக்கூட அனுமதி சீட்டை பதிவிறக்கம் செய்தல்:

ஆன் – லைனில் விண்ணப்பத்தினைப் பதிவு செய்த பிறகு தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை (Admission Certificate) பதிவிறக்கம் செய்ய வேண்டும். எனவே, ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## அரசுத் தேர்வு சேவை மையங்களில் (Government Examinations Service Centres) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

## S வகையினர் (ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள்)

- ஏற்கனவே எஸ்.எஸ்.எல்.சி தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற பாடங்களின் மதிப்பெண் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்
- அறிவியல் பாடத் தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் அறிவியல் செய்முறைப் பயிற்சி முடித்ததற்கான அத்தாட்சி சான்றிதழை பள்ளித் தலைமையாசியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும்.

## SP வகையினர் (நேரடித் தனிதேர்வர்கள்)

- எட்டாம் வகுப்பு தேர்ச்சி/ஒன்பதாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு படித்தமைக்கான அசல் மாற்றுச் சான்றிதழ் (அல்லது)
- எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வினில் தேர்ச்சி பெற்றமைக்கான அசல் மதிப்ணெ் சான்றிதழ்
- அறிவியல் பாடத்தில் அறிவியல் செய்முறைப் பயிற்சி ஏற்கனவே முடித்ததற்கான அத்தாட்சி சான்றிதழை பள்ளித் தலைமையாசியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும்.
- மெட்ரிக் /ஆங்கிலோ இந்தியன் தேர்வெழுதி தோல்வியுற்ற தேர்வர்கள் அன்னாரின் அனைத்து அசல் மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் சேவை மையங்களில் ஒப்படைத்தல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்டுள்ள இணைப்புகளை சமர்ப்பிக்கும் தனித்தேர்வர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே ஆன்–லைன் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும். இணைப்புகளுடன் பெறப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.**

மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள் **"சிறப்பு அனுமதித் திட்டத்தில்"** **11.09.2018 (செவ்வாய்க்கிழமை) மற்றும் 12.09.2018 (புதன்கிழமை)** ஆகிய இரு தேதிகளில் ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் அனைத்து தனித்தேர்வர்களுக்கும் திருநெல்வேலி, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், கடலூர், வேலூர் மற்றும் சென்னை ஆகிய மண்டல அலுவலகங்களின் தலைமையிடத்தில் மட்டுமே தேர்வு மையம் / மையங்கள் அமைக்கப்படும்.

தேர்வுக் கட்டணம் ரூ.125/– இவற்றுடன் கூடுதலாக சிறப்பு அனுமதி கட்டணமாக ரூ.500/– மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணமாக ரூ.50/– ஆக மொத்தம் ரூ.675/– பணமாக மட்டுமே அரசுத் தேர்வு சேவை மையத்தில் செலுத்த வேண்டும்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும் தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம்:** சென்னை – 600 006
**நாள் :** 20.08.2018